-57-

சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலன் – வேளாண்மைப் பொறியியல் துறை – 2023-24 ஆம் ஆண்டில் புதிய வேளாண்மைப் பொறியியல் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த செயல் விளக்கங்கள் / தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## வேளாண்மை - உழவர் நலத் (வே.பொ.1) துறை

அரசாணை (நிலை) எண்:82

நாள்:09.05.2023
சோப கிருது வருடம்,
சித்திரை 26 நாள்
திருவள்ளுவர் ஆண்டு, 2054
படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.106, வேளாண்மை-உழவர் நலத் (வே.பொ.1) துறை, நாள் 24.05.2022.
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), கடித எண்.மபா.1/14997/2023, நாள் 17.04.2023.

........

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2022-23 ஆம் ஆண்டில், 42 புதிய வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்கள் / இயந்திரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 50 செயல்விளக்கங்கள் நடத்தப்பட்டன. அச்செயல் விளக்கங்களில், 2253 விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்துள்ளதாக தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தெரிவித்துள்ளார்.

2. மேலும், கடந்த 2022-23 ஆம் ஆண்டில் புதுமையான, தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்களில் பங்குபெற்ற விவசாயிகளின் கருத்துக்களின் அடிப்படையில், ஒன்றிய அரசு திட்டங்களில் சேர்க்க, வேளாண்மைப் பொறியியல் துறை முயற்சி எடுத்து, இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் (IIHR-ICAR) பெங்களூரு மூலம் உருவாக்கப்பட்ட வெங்காயத்தாள் நீக்கும் இயந்திரம்சூரிய , சக்தியால் இயங்கும் முச்சக்கரவண்டி தனியார் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட டிராக்டருடன் இயங்கும் நடமாடும் நெல் உலர்த்தி ஆகிய இயந்திரங்களை வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத்தின் (SMAM) கீழ், விவசாயிகள் மானிய உதவியுடன் பெறுவதற்கான வழிவகைகள் ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளது.

3. இதனைத் தொடர்ந்து, 2023-24 ஆம் ஆண்டிலும், புதிய வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், 50 செயல் விளக்கங்களையும், தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகளையும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தலைமைப் பொறியாளர்(வேளாண்மைப் பொறியியல்) தெரிவித்துள்ளார்.

4. இத்திட்டத்திற்கான பிரேரணையை தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், வேலையாட்களின் செலவு, தண்ணீர் பற்றாக்குறை ஆகிய பிரச்சினைகளை குறைக்கவும், அதிக வருமானம் பெறவும், பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்துடன், அதிகத் திறன் கொண்ட இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்த தற்பொழுது விவசாயிகள் முன் வருகின்றனர். சாதுர்யமான வேளாண்மை (smart farming) என்பது ஒரு வளர்ந்து வரும் தொழில்நுட்பமாகும். இந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண்மையை மேற்கொள்வதன் மூலம், வேளாண் உற்பத்திக்குத் தேவையான மனித உழைப்பை குறைத்து, சாகுபடி செலவைக் குறைக்கும் உத்திகளை செயல்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. எனவே, விவசாயிகள் எந்தவித இடையூறும் இல்லாமல் "தொழில்நுட்பம் சார்ந்த சாதுர்யமான வேளாண்மையை (Smart Farming)" பின்பற்றுவதற்கு உதவும் வகையில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், புதுமையான இயந்திரங்கள்/கருவிகள், தொழில்நுட்பங்கள் பற்றிய செயல் விளக்கங்களை நடத்தி விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறையானது, புதிய தொழில்நுட்பங்களை கண்டறிய, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் (ICAR) பல்வேறு நிறுவனங்கள், அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வுக் குழுமம் (CSIR), வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள், பிற அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு, புதுமையான உத்திகளைக் கையாளும் உள்ளூர் விவசாயிகளுடன் தொடர்ச்சியான தொடர்பில் இருந்து வருகிறது. இத்துறையானது மண் வளம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, வேளாண் இயந்திரமயமாக்குதல், உணவுப் பதப்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவற்றில் நடைமுறையில் உள்ள தொழில்நுட்பங்களையும் புதுமையான தொழில்நுட்பங்களையும் கண்டறிந்து, விவசாயிகளுக்கும் விவசாய தொழில் முனைவோர்களுக்கும் செயல் விளக்கங்கள் மூலம் அத்தொழில்நுட்பங்களைக் கொண்டு செல்கிறது.

விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக, பயிர் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கும், வருமானத்தினை உயர்த்திடவும் பயிர்களுக்கு ஏற்ற

வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பிற புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

எனவே, நடப்பு 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், 50 செயல் விளக்கங்களும், தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகளும் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. அரசிடம் எந்த நிதியும் கோரப்படாதவாறு, தனியார் நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறையினால், இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தெரிவித்துள்ளார்.

<u>எதிர்நோக்கப்படும் பயன்கள்:-</u>

1) செயல்விளக்கங்கள் மூலம், புதுமையான தொழில்நுட்பங்கள்/ இயந்திரங்கள் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் பல்வேறு திட்டங்களை விவசாயிகளிடையே கொண்டு சேர்த்தல்.
2) நேரடி கள விளக்கக்காட்சிகள், டிஜிட்டல் வடிவிலான குறிப்பேடுகள் (Digital flyers), துண்டுப்பிரசுரங்கள், ஒலிஒளிக் காட்சிகள் வாயிலாக தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் பற்றிய விவரங்களை விவசாயிகளின் மத்தியில் பிரபலப்படுத்தல்.
3) விவசாயிகள் வேளாண் தொழிலை ஆர்வமுடன் மேற்கொள்ள உதவுதல்.
4) விவசாயிகள் வேளாண் பணிகளை புதிய தொழில்நுட்பங்கள் மூலம் இலகுவாக மேற்கொள்ள உதவுதல்.
5) தொழில்நுட்பப்பரிமாற்றம் மற்றும் செயல்விளக்கங்களை விவசாயிகளின் தேவைக்கேற்ப ஒருங்கிணைத்து மேற்கொள்ளுதல்.

5. எனவே, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், புதிய வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த, நடப்பு 2023-24 ஆம் ஆண்டில், அரசிடம் எந்த நிதியும் கோரப்படாதவாறு தனியார் நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் 50 செயல் விளக்கங்கள்/தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடத்த, வேளாண்மைப் பொறியியல் துறையால் நடத்திட அனுமதி வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கோரியுள்ளார்.

6. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், புதிய வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த, நடப்பு 2023-24-ஆம் ஆண்டில் அரசின் நிதி உதவி ஏதுமின்றி, 50 செயல் விளக்கங்கள்/ தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகளை தனியார் நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களின்

உதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறையால், நடத்த தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)-அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணையானது அரசாணை (நிலை) எண். 334, நிதி (வ.செ.பொ.1) துறை, நாள். 22.10.2022-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை-35.

நகல்:
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை,
தலைமைச்செயலகம், சென்னை – 9.
நிதி (வே (ம)உ_ந)/ (வசெ2)/ (வவ1) துறை, சென்னை – 9.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3) துறை, சென்னை – 9.
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை- 9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 10/5/23
10.05.23